**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 157/2023 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | **திரு. வால்ட்டர்** | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | த/பெ. | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 10.07.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து துறைமுகத்தில் வேலைச் செய்து வருகிறேன். நான் துறைமுகத்தில் உள்ள காணிக்கை மாதா கோவிலில் செயலாளராக இருந்து வருகிறேன். எங்கள் ஊரில் 2022 ம் வருடம் 7 நாட்கள் ஆலயத்தில் திருவிழா நடந்தது. காணிக்கை மாதா கோவிலில் 4 உண்டியல்கள் உண்டு. கோவிலில் மணி அடிக்கும் ராஜ் என்பவர் இரவு 08.00 மணிக்கு பூட்டிவிட்டு காலை 04.00 மணிக்கு திறப்பது வழக்கம். 13.02.2022 ம் வருடம் வழக்கம் போல் இரவு 08.00 மணிக்கு ஆலயத்தைப் பூட்டிவிட்டு மறுநாள் காலை 04.00 மணி அளவில் கோவிலைத்திறந்துப் பார்த்தபோது காணிக்கை மாதா சொரூபத்தின் முன்பாக உள்ள ஒருகாணிக்கைப்பெட்டியிலும, குழந்தை யேசு சொரூபத்தின் முன்பாக உள்ள ஒரு காணிக்கை பெட்டியிலும் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. மேலும் காணிக்கை மாதா சொருபத்தின் பூட்டு உடைக்கப்பட்டிருப்தைப் பார்த்து எனக்கு காலை 04.30 மணிக்குள்ளாக எனக்கு தகவல் தெரிவித்தார். நானும் பங்குதந்தை மரிய செல்வம், வேறு சில உறுப்பினர்கள் மற்றும் ஊர்காரர்கள் சேர்ந்து காணிக்கை மாதா கோவில் சென்றுப் பார்த்தோம். சென்றுப் பார்த்த போது பணியாளர் சொன்னது போல் இரண்டு காணிக்கைப்பெட்டிகளிலும, காணிக்கை மாதா சொரூபத்திலும்

பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தது.

காணிக்கை மாதா சொரூபத்தில் போடப்பட்டிருந்த 5 பவுன் செயினும், மேலும் காணிக்கை மாதாவின் கையில் இருந்த குழந்தை சொரூபத்தில் போடப்பட்டிருந்த 2 பவுன் செயினும் காணவில்லை. குழந்தை யேசு சொரூபத்தில் போடப்பட்டிருந்த 6 கிராம் எடையுள்ள 3 மோதிரங்கள் காணாமல் போய்விட்டது. மேலும் உண்டியல்களில் இருந்த ரூபாய் 1 இலட்சத்திற்கும் மேலான பணத்தையும் காணவில்லை.

கோவிலின் பால்கனியில் முன்னாடி பார்த்த கேமரா ஒன்று காணிக்கை மாதா சொரூபத்திற்கு எதிர்த்தாற்போல் சொரூபத்தை பார்த்தாற் போல் வைக்கப்பட்டிருந்தது. மேலும் பலி பீடத்தில் 2 கேமராக்கள் குருக்கள் அமரும் இருக்கையில் துணி மூலமாக மூடப்பட்டிருந்தது. துணிகளை அகற்றி கேமரா பதிவுகளைப் பார்க்கும்போது ஒருநபர் ஹெல்மெட் அணிந்து ரெயின் கோர்ட்டு அணிந்தும் ஹெல்மெட்டுக்கு மேல் பர்தா அணிந்து கோவிலுக்குள் குனிந்து நுழையும் போது ஆள் அடையாளம் தெரியவில்லை. ஹெல்மெட் மட்டும் தெரிந்தது. இது சம்மந்தமாக காவல்நிலையம் சென்று புகார் மனுக்கொடுத்தேன்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து நகைகளை பெற்றுக்கொண்டேன். மேற்படி நகைகளுக்கான பஞ்சநாமா அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

<u>குறுக்கு விசாரணை</u> :

நான் அந்த கோவிலின் செயலாளர் என்றால் சரிதான். நான் வரவு செலவு நன்கொடை சம்மந்தமான கணக்குகளை பராமரிப்பேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நகைகள் அனைத்தும் நன்கொடையாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். யார் நகை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

மேற்படி கோவிலில் எத்தனை கேமரா என்றால் 4 கேமராக்கள் உண்டு. என்னிடம்காட்டப்படும் புகார் மனு நான்கொடுத்தது தான். நான் கொடுத்த புகார் மனுவில் 4 பவுன் காணவில்லை என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆம் சொல்லப்பட்டுள்ளது. காணிக்கை போடும் போது எழுதும் பழக்கம் உண்டா என்றால் - இல்லை. நான் கொடுத்த புகார் மனுவில் 77,500 ரூபாய் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

தொகையைப் பொறுத்து எனக்கு உறுதியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.நான் எத்தனை பவுன் காணவில்லை என்று புகார் கொடுத்தேன் என்றால் 7 பவுன். நான் கொடுத்த மற்றொரு புகாரில் 5 இலட்சம் ரூபாய் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுபோல் 4 பவுன், 2 பவுன் தங்க செயின்என்று எழுதப்ட்டுள்ளது என்றால் ஆம் எழுதப்பட்டுள்ளது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை, ஆனால் ஒப்பம் என்னுடையது தான்.

நீதிமன்ற கேள்வி - மொத்தம் எத்தனை கம்பிளைண்டு கொடுத்தோம் என்றால் ?

பதில் - முதலில் ஒன்று தான் கொடுத்தோம். அதன் பிறகு பொருளாளரின் அறிவுரைப்படி என்னிடம் கையெழுத்து மட்டும்வாங்கி அவர்கள் கொடுத்தார்கள்.

ரூபாய் 1 இலட்சமா, அல்லது 5 இலட்சமா அல்லது 77500 என்றால் ரூபாய் 77,500 என்பது நகைகக்கான தொகை, மீதம் உள்ள 1 இலட்சம் இரண்டு பெட்டிகளில் இருந்த தோராய தொகை. வழக்கு சம்பவ காலகட்டத்தில் ஒரு பவுன் நகை ரூபாய் 35 ஆயிரத்திற்கு மேல் இருக்கலாம். அப்படி என்றால் 4 பவுனுக்கு ஒரு இலட்சத்தி 20 ஆயிரம் வருகிறது. பின்னர் எதற்காக 77,500 நகைக்கானது என்று எப்படி சொன்னேன் என்றால் நான் தான் எழுதிக்கொடுத்துவிட்டேன். எழுதியது தவறு தான்.

நான் இந்த வழக்கின் சங்கதியைப் பொறுத்து ஒருவேளை சொரூபத்தில் இருந்து எடுக்கப்படாத நகைகளை ஒரு அப்பாவியிடம் இருந்த பெற்று அதை சொரூபத்தில் வைத்திருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. நான் 7 பவுன் என்று தான் சொல்லியுள்ளேன். எனது புகாரின் படி 7 பவுன் மற்றும் 6 கிராம் மோதிரம் நான் கேட்டேனா என்றால் 7 பவுன் நகை கேட்டுள்ளேன்.

நான் புனிதமான இடத்தில் ஒரு பொறுப்பான பதவில் உள்ளேன் என்றும் அவ்வாறான சூழ்நிலையில் ஒரு அப்பாவியிடமிருந்து சொரூபத்திலிருந்து காணாமல் போகாத ஒரு நகையை அந்த சொரூபத்தில் சேர்த்திருந்தால் அது பாவம் என்றால் - சரிதான்.

மொத்தம் எத்தனை காணிக்கை பெட்டிகள் என்றால் 4 காணிக்கைப் பெட்டிகள். மீதம் உள்ள உடைக்கப்படாத இரண்டு காணிக்கை பெட்டிகளில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் 5, 6 ஆயிரம் இருந்தது. உடைக்கப்பட்டிருந்த இரண்டு காணிக்கை பெட்டிகள் தான் மெயினான காணிக்கை பெட்டிகள் ஆகும். களவு போன அன்றே மற்ற இரண்டு பெட்டிகளையும் நாங்கள் திறந்துப் பார்த்தோம்.

நகையின் அளவீடு எனக்கு தெரியாது என்றாலும் அதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றாலும் போலீசாரிடமிருந்து நகைகளைவாங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக முன்னுக்கு பின் முரணாக

வெவ்வேறு புகார்களை கொடுத்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெற்றுச்சென்ற நகைகளை மேற்படி சொ்ருபத்தில் இருந்து எடுக்கப்பட்ட நகைகள் அல்ல என்றும் அது குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமிருந்து பெற்றுச்சென்ற நகைகள் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.